தென்றல்

ஆசிரியர் கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 13 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6.

மலர் 3 | சென்னை | 22-6-57 | சனிக்கிழமை | இதழ் 40

இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர் விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்

'தமிழர் வீரம்' என்னும் இத்தொடர் தமிழர்களின் வீரம் என விரிந்து பண்டைக் காலத்தில் நம் தமிழ் பெருமக்கள் காட்டிய வீரச் செயல்களை உணர்த்தும் வாயிலாக, நிகழ் காலத்தில் நாம் அடைத்துள்ள பிற்போக்கையும், எதிர்காலத்தில் எவ்வாறு பண்டைய நிலையை அடையலாம் என்பதையும் அறிவிக்கும் பொருட்செறிவுடையதாகும்.

பரந்த இந்நில உலகத்தில் முதல் முதல் மக்கட் பிறப்பு எடுத்தவர்களால் பேசப் பெற்றதும், அவர்களது முதிர்ந்த அறிவு வளர்ச்சியின் பயனாக வெளி வந்த பலப்பல இலக்கியங்களைக் கண்டதும், குல்லாவுக்குத் தலை செய்யாமல் தலைக்குக் குல்லாச் செய்தது போன்ற இலக்கணங்களையுடையதுமாகிய தெய்வச் செந்தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்டு, அத் தாய்மொழிப்பற்றுக் காரணமாக அதற்கு ஏதேனும் இடையூறு நேருமாயின் தம் உயிரைக் கொடுத்தேனும் அவ்விடையூற்றை நீக்கி அம்மொழியைப் பேணுபவர்கள் அனைவரும் தமிழர்களே!

பண்டைக் காலத்தில் இவர்கள் வாழ்ந்த இடம், வடக்கே திருவேங்கட மலையும், தெற்கே (கன்யா) குமரியும், கிழக்கும், மேற்கும் கடல்களும் எல்லையாக உடையது என்பதை,

''வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்
நாற்பெயர் எல்லை யகத்தவர் வழங்கும்
யாப்பின் வழிய தென்மனார் புலவர்''

என ஒல்க[illegible] தொல்காப்பியரும்;

''வடவேங் கடம்தென் குமரி யாயிடைத்
தமிழ்கூறும் நல்லுல கத்து''

எனப் பனம்பாரனாரும்,

''வேங்கடம் குமரி தீம்புனற் பௌவமென்(று)
இந்நான்கெல்லை தமிழது வழக்கே''

எனச் சிகண்டியாசிரியரும்,

''வடக்கும் தெற்கும் குடக்கும் குணக்கும்
வேங்கடம் குமரி தீம்புனற் பௌவமென்(று)
அந்நான் கெல்லை அகவயிற் கிடந்த
நூலதின் முறையே வாலிதின் விரிப்பின்''

எனக் காக்கை பாடினியாரும்,

''வடதிசை மருங்கு வடுகு வரம்பாகத்
தென்றிசை யுள்ளிட்(டு) எஞ்சிய மூன்றும்
வரைமருள் புணரியெகடு பொருது கிடந்த
நாட்டியல் வழக்கம்''

எனச் சிறு காக்கை பாடினியாரும்,

''நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்
தமிழ்வரம் படுத்த தண்புனல் நன்னாட்டு''

என இளங்கோவடிகளும் கூறியிருப்பவற்றால் அறியலாம். இத்துணை விரிந்த எல்லையைக் கொண்ட நமது அருமைத் தாய் நாடாகிய தமிழ்நாடு இப்போது எத்துணை சுருங்கிவிட்டது என்பதை நினைத்தால் உண்மையான தமிழனின் குருதி கொதிக்காமல் இராது. அச் சுருக்கம் தமிழ் மொழியாகியநம் தாய் மொழியினிடத்து நாம் வைத்த அன்புச் சுருக்கத்தையே காட்டுகின்றது.

பருஞ்சொல் விளக்கனார்
. மு. சரவண முதலியார்

எனவே மேலே காட்டிய எல்லைக்குள்ளிருந்து தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட அனைவரும் தமிழராவார் என்பது பெறப்பட்டது.

இஃது எல்லா மக்களிடத்தும் இயல்பாக அமைந்துள்ள உயிர்க் குணங்களுள் ஒன்று. மற்றப் பிராணிகளிடத்து இது காணப்படுவதாயினும் அஃது அவ்வுயிர்களிடத்து இயல்பாய் அமைந்தது; ஆனால் பகுத்தறிவோடு பொருந்தாததாகும். மக்களிடத்துக் காணப்படுவது பகுத்தறிவோடு பொருந்தியதாகும். பகுத்தறிவற்ற பிராணிகளிடத்து இயல்பாக அமைந்த செயலைப் புலன் கண்டு அதற்கொரு காரணம் கற்பித்து அதனை ஒரு வீரனுடைய வீரச்செயலுக்கு உவமையாக்குகின்றான் என்பதை அடியில்வரும் நாலடியாரிலுள்ள பாடல் ஒன்றால் அறியலாம். அது,

''கடமா தொலைச்சிய கானுறை வேங்கை
இடம்வீழ்ந்த துண்ணா திறக்கும்-இடமுடைய
வாகனம் கையுறினும் வேண்டார் விழுமியோர்
மானம் அழுங்க வரின்''

என்பது. புலி ஒன்று தான் உண்டு பசியைப் போக்கிக் கொள்ள யானை ஒன்றை அறைந்து வீழ்த்தும். அக்களிறு அக்கொடு வரியின் வலது பக்கத்தில் வீழ்ந்தால் உண்டு பசி தீருமாம்; அஃதன்றி இடப்பக்கத்தில் வீழ்ந்தால் உண்ணாதொழியும். இது அப் புலியிடத்துக் காணப்படும் பரம்பரைப் பழக்கம். பெரியோர்கள் தங்கள் மானம், வீரம் முதலியவற்றை இழத்தலால் தேவலோகப் பதவி கிடைப்பதாயினும் அதனை விரும்பமாட்டார்கள் என்பதற்கு அப்புலியின் செயலை உவமையாக்கினான் புலவன்.

வீரம் என்பது உள்ளத்தைப் பற்றுக் கோடாகக் கொண்டு அடங்கிக் கிடக்கும்போது ஒரு குணமாக இருந்து வெளியே வருகையில் வீரச்செயல் என்னும் பெயரைப் பெறுகிறது. மனத்துக் கண் மாசிலாதவனாய் எல்லா உயிர்கட்கும் நலம்செய்ய வேண்டுமென்று ஒருவன் கருதினால் அக்கருத்து அறம் என்னும் பெயர் பெற்றுப் பின் அது செயலாக வெளிப்படும்போது 'அறவினை' என்று சொல்லப்படுதல் போல மேலே காட்டிய வீரமும், உள்ளத்தில் அடங்கியிருக்கும் நிலை ஒன்று. வெளிப்படும் நிலை ஒன்று. ஆனால் 'அறவினை' (அறமன்று) காலம் தோறும் மாறுபடும் இயல்புடையது. வீரச் செயல் அவ்வாறு மாறுபடாமல் எக்காலத்தும் ஒரே தன்மையாயுள்ளது. இவ் வீரத்தை எண் வகைச் சுவைகளுள் ஒன்றாக வைத்துப் 'பெருமிதம்' என்ற பெயரால் தொல்காப்பியர் மெய்ப்பாட்டியலுள் கூறுகின்றார். அப் பெருமிதம் என்பது கல்வி, தறுகண், இசைமை, கொடை என்னும் நான்கையும் நிலைக்களமாகக் கொண்டு தோன்றும் என்பதை,

— 8-ம் பக்கம் —

உண்மைக் கதை

-முல்லைவழுதி-

தமிழ்நாட்டில் சிறுகதை எழுத்தாளர்கள் மலிந்துவிட்டாலும் ஒரு சிலரது பெயர்களும் அவர்களது படைப்புகளும்தான் வாசகர்களின் இதயங்களில் இடம் பெற்றிருக்கின்றன. இங்கே தோழர் முல்லைவழுதி புதிய சம்பவங்களைக் கோர்வை செய்து புதிய பாணியில் கதையை உருப்பெற வைத்திருக்கிறார். கதைக்குத் தலைப்புதான் 'உண்மைக் கதை' என்றாலும் படித்து முடித்தவுடன் இது நடந்த கதையோ என்ற உணர்வு தட்டுப்படுகிறது. (ஆர்)

"தபாலிலேயே அனுப்பியிருக்கலாமே! தகுதியுடையதாக இருந்தால், கட்டாயம் பிரசுரிப்போம்!" என்ற வண்ணம், எதிரில் நின்ற இளைஞன் நீட்டிய கையெழுத்துச் சுவடிச்கட்டைப் பிரித்துப் பார்த்தார் 'பிரபல' பத்திரிகாசிரியர் பஞ்சாமிர்தம். -

"ஆனால் இது...வார்த்தையை முடிக்காமல் இளைஞன் தயக்கத்துடன் நின்றான்.

"எதுவாக இருந்தாலும் சரி, பிரசுரத்திற்கேற்ற கதையானால் நிச்சயம் வெளியிடுவேன். இப்போது தங்களுடன் அதிகநேரம் பேச அவகாசமில்லாமையினால் வருந்துகிறேன். நண்பரொருவரின் திருமணத்திற்கு இன்று இரவு புறப்பட இருக்கிறேன். ஆகவே, அலுவலக வேலைகளைச் சீக்கிரமாக முடிக்கவேண்டும்."- அவசரப்பட்டார் பஞ்சாமிர்தம்.

வந்தவன் உடனே போவதாகத் தெரியவில்லை; தயங்கித் தயங்கி நின்றான்.

"அந்த திருமணம் உங்கள் தலைமையில்தான் நடப்பதாக..."

"ஆமாம். அதற்கென்ன?"

"அதற்குமுன் இதை..."

"சுத்த அவசரக்குடுக்கையாக இருக்கிறானே! சந்தர்ப்பத்தைச் சொன்னால் தெரிந்துகொள்ளவில்லையே!" என்று மனதிற்குள் எண்ணிக் கொண்டு, "சரி. அப்படியே செய்கிறேன்!"என்ற வண்ணம், நாற்காலியில் அமர்ந்தார் பஞ்சாமிர்தம்.

"இரவுதானே திருமணத்திற்கு புறப்படுகிறீர்கள்?"

"ஆமாம்."

மாலை வருகிறேன்."

"அதற்குள் படித்து முடித்து முடிவை உம்மிடம் கூறுகிறேன். சரிதானே?"

நன்றி நிறைந்த பார்வையுடன் விடைபெற்றுச் சென்றான் வாலிபன்.

"விட்டது சனியன்" என்று முணுமுணுத்துவிட்டு, வேறு வேலைகளைக் கவனிக்கத் தொடங்கினார் பஞ்சாமிர்தம்.

பஞ்சாமிர்தம் பத்திரிகைத் தொழிலில் ரொம்ப அடிபட்டவர், அதாவது அனுபவப்பட்டவர்; முயற்சியால் முன்னுக்கு வந்தவர், பஞ்சாமிர்தம் என்பது அவரது புனைப்பெயராக இருக்கலாம்; உண்மைப் பெயர் என்னவோ நமக்குத் தெரியாது. அவர் நடத்தும் வார இதழுக்குப் பெயர் "கதம்பம்" என்பது. "மத்தாப்பு", "மருக்கொழுந்து" என்ற இரண்டு பத்திரிகைகளுக்கு அவர் ஆசிரியராக இருந்தவர். "மத்தாபபு" ஒளி விடாமலும், "மருக்கொழுந்து" மணம் வீசாமலும் போனதால், மனமுடைந்து போகவில்லை பஞ்சாமிர்தம். தோல்வி, வெற்றி மாடியின் அடித்தளம் என்று ஆறுதலடைந்தார்.

"கதம்பம்" வார இதழ் தொடங்குவதற்கு முன்பு, பல மாதங்களாக தினசரி ஏடுகளில் விளம்பரம் செய்தார். ரசிகர்களின் உள்ளங்களில் ஆவலை எழுப்பினார்: '"கதம்ப"த்தில் கற்பனைக் கதைகளுக்கு இடம் கிடையாது! உண்மைக் கதைகளே பிரசுரிக்கப்படும். வரண்ட உள்ளங்களில் தோன்றும் பயனற்ற கற்பனை என்னும் காகித மலர்களால் தொடுக்கப்பட்டதல்ல "கதம்பம்", உண்மை சம்பவங்கள் என்னும் மணம் வீசும் மலர்களால் தொடுக்கப்பட்டது. ரசிக வண்டுகளுக்கு "கதம்பம்" குறையாமல் சுவைத்தேனை அளித்துக் கொண்டே இருக்கும்!'—பஞ்சாமிர்தத்தின் பத்திரிகை விளம்பரம் பயன்படாமல் போய்விடவில்லை; நல்ல ஆதரவைத் தேடிக்கொடுத்தது!

"கதம்பம்" பத்திரிகையுலகில் ஓர் 'தனியிடம்' பெற்றுவிட்டது. தேக்கமின்றி இதழ்கள் செலவாயின. விற்பனையாளர்களும் சந்தாதாரர்களும் அதிகமாகிக் கொண்டே இருந்தனர்.

"ரசிக வண்டுக"ளுக்கென்று தனிப்பகுதியைக் "கதம்பம்" ஒதுக்கியிருந்தது. தமது பெயர் பத்திரிகையில் வரவேண்டுமென்று விரும்பும் "வண்டுகள்", "கதம்ப' த்தை வானளாவப் புகழ்ந்து எழுதுவர்.

காதல் கதைகளைத் தவிர வேறெந்தக் கதைகளையும் "கதம்பம்" பிரசுரிப்பது கிடையாது! "கள்ளக் காதலன்," "சினிமாவில் சந்திப்பு," "இருட்டறையில் இன்பம்," "ஓடிவிட்டவர்கள்," "பாட்டியின் காதல்," "முத்தம் வேண்டுமா"—இப்படி விசித்திரமான தலைப்புகளைத் தாங்கி "கதம்ப"த்தில் பிரசுரமாகும் 'நடந்த' சிறுகதைகள், அப்பாவி இளைஞர்களின் உள்ளங்களில் கிளர்ச்சியை உண்டுபண்ணின! பஞ்சாமிர்தத்தின் பெட்டி, நிரம்பி வழிந்தது!

ஒவ்வொரு இதழிலும், குமரேசன் எழுதும் "நடந்த" கதைகள் பிரசுரமாயின. குமரேசனின் கதைகளை 'ரசிகர்கள்' அதிகமாக விரும்பிப் படித்தார்கள்.

குமரேசனின் சொந்த ஊர் செல்வத்தூர். குமரேசன் செல்வத்தில் பிறந்தவன், ஒரே பிள்ளை; கட்டுப்பாடில்லாமல் வளர்க்கப்பட்டவன்; வாலிபன், மணமாகாதவன். பருவக் கோளாறின் காரணமாக உள்ளத்தில் தோன்றும் எண்ணங்களை எல்லாம் எழுத்துருவாக்கி, "உண்மைக் கதை" என்று பெயரிட்டு "கதம்ப"த்திற்கு அனுப்புவான். அதற்குத் தூபமிடும் வகையில், அடுத்த வாரமே கதை பிரசுரமாகும்.—இந்த வகையிலே தொடர்பு கொண்டு தோழமை பூண்டவர்கள் தான், பஞ்சாமிர்தமும் குமரேசனும்.

குமரேசனின் திருமணத்திற்கு போவதற்காகத்தான், அவசர அவசரமாக அலுவலக வேலைகளை முடித்தார், பஞ்சாமிர்தம்.

★

சென்னையிலிருந்து நீலகிரி செல்லும் எக்ஸ்பிரஸ், அதிவேகத்துடன் ஓடிக்கொண்டிருந்தது. இரண்டாம் வகுப்புப் பெட்டியில் பஞ்சாமிர்தம் அமர்ந்திருந்தார். ஏதாவது படிக்கலாமென்று பையைத் திறந்தார். அந்த வாரம் வெளியான கதம்பம், சில புத்தகங்கள் ஆகியவற்றுடன் ஒரு காகிதக் கட்டும் பையிலிருந்தது! அன்று காலையில் அலுவலகத்திற்கு வந்த வாலிபன் கொடுத்துவிட்டுச் சென்ற கையெழுத்துச் சுவடிக் கட்டு அது.

அன்று மாலை கதையைப் பற்றி முடிவு கூறுவதாக வாலிபனிடம் சொன்னாரல்லவா பஞ்சாமிர்தம்? ஆனால், வாலிபனை அவர் சந்திக்க விரும்பவில்லை. தாம் இல்லை என்று தகவல் கொடுத்து அவனை அனுப்பி விட்டார்.

எப்படி அது பைக்கு வந்தது? ஒரு வேளை அவசரத்தில் அதையும் எடுத்துக்கொண்டு வந்திருக்கலாம்.—அவர் மனம் கூறியது.

என்னதான் எழுதியிருக்கிறான் பார்ப்போமே என்று பிரித்துப் பார்த்தார் பஞ்சாமிர்தம். "உண்மைக் கதை" என்ற தலைப்பில் சுமார் ஏழு பக்கங்கள் எழுதப்பட்டிருந்தது. அத்துடன் ஆசிரியருக்கு ஒரு கடிதமும் இருந்தது.

எப்படியாவது தமது கதை பிரசுரமாக வேண்டும் என்பதற்காக, தாம் அனுப்பும் கதையுடன், ஒரு நீண்ட கடிதமும் எழுதுவார்கள் சிலர்.

"எப்படியாவது இந்தக் கதையை நீங்கள் பிரசுரிக்கத்தான் வேண்டும். எழுதி எழுதி தோல்வி கண்டு மனமுடைந்துவிட்டவன் நான். தாங்கள் இந்தக் கதையைப் பிரசுரித்தால், என்றைக்கும் தங்களை மறக்கமாட்டேன். நன்றியுள்ளவனாக இருப்பேன். அத்துடன் நான தங்கள் பத்திரிகையின் நீண்டநாள் சந்தாதாரன் என்பதையும் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்."

"கதையைத் திருத்தி வெளியிட உமக்குப் பூரண உரிமையுண்டு. எனது இந்த முதல் கதைக்குத் தாங்கள் சன்மானம் ஒன்றும் தரவேண்டியதில்லை. வெளியிட்டாலேயே போதும்."

"இரவு பகலென்றில்லாமல், ஓயாமல் எழுதி எழுதி அனுப்புகிறேனே, கொஞ்சமாவது உமக்குக் கருணை இல்லையா? உமது மனமென்ன கல்லா, இரும்பா? நானனுப்பும் கதைகளைவிட மிக மிக மட்டமான கதைகளை எல்லாம் வெளியிடுகிறீர்களே!"

"இந்தக் கதையை நீங்கள் வெளியிடாவிட்டால், தங்கள் சந்தாதாரர் பட்டியலிலிருந்து நான் விலகிக் கொள்வதாகத் தீர்மானித்திருக்கிறேன்!"

சில இளம் எழுத்தாளர்கள், தங்கள் கதைகளுடன் அனுப்பும் இதுபோன்ற பல கடிதங்களைப் படித்துப் பழக்கப்பட்டவர் பஞ்சாமிர்தம். இக்கடிதமும் அவ்வாறுதான் இருக்கும் என்று எண்ணியவராய், கடிதத்தை ஒதுக்கிவிட்டு கதையைப் படிக்கத் தொடங்கினார்.

"சிறிய வயதிலிருந்தே நானும் மாலதியும் ஒன்றாக வளர்ந்தவர்கள். முழுமனதுடன் ஒருவரையொருவர் நேசிக்கிறோம். இன வேற்றுமை எங்களைப் பிரிக்க முற்படுகிறது..."

கேட்டுக் கேட்டு புளித்துப் போன சம்பவங்கள் என்று முணுமுணுத்த வண்ணம் புரட்டத் தொடங்கினார். கதையிலே சுவை இருப்பதாகவே தெரியவில்லை. சுருட்டிப் பையில் வைத்துவிட்டு, சன்னலில் தலையை நீட்டி வானத்தை அண்ணாந்து பார்க்கத் தொடங்கினார்.

☆

பஞ்சாமிர்தத்தின் தலைமையில், பிரபல எழுத்தாளர் குமரேசனுக்கும் மாலதிக்கும் கோலாகலமாகத் திருமணம் நடைபெற்றது! மணப்பந்தல் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. திருமணத்திற்கு ஏராளமான செல்வம் செலவழிக்கப்பட்டிருந்தது. வாழ்த்துப்பத்திரங்கள், அன்பளிப்புகள் ஏராளமாகக் குவிந்தன. பஞ்சாமிர்தம் நீண்டதொரு சொற்பொழிவு நிகழ்த்தினார்.

ஆரணங்கு மனைவியாவதில் யாருக்குத்தான் மகிழ்ச்சி இருக்காது? - மணமகன் மகிழ்ச்சியில் திளைத்திருந்தான். உயிர்பெற்ற தங்கச் சிலைபோல் காட்சியளித்தாள், மணமகள் மாலதி. ஆனால் அவள் மதிவதனத்தில் சோகக் கறை படிந்திருந்தது! மணப்பெண்ணுக்கு இருக்கவேண்டிய பூரிப்பும், புளகாங்கிதமும், மாலதிக்கு இல்லை.

அன்று இரவு இரயிலில் பஞ்சாமிர்தம் புறப்பட்டார். குமரேசன், நிலையம் வரை வந்து நன்றிகூறி வழியனுப்பினான். மணம்புரிந்துகொண்ட குதூகலத்தில் "க்தம்"பத்தை மறநது விட வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார் பஞ்சாமிர்தம். இரயில் கூவிவிட்டு புறப்பட்டது. சிந்தனையிலாழ்ந்தார் பஞ்சாமிர்தம்.

நிலையம் ஒன்றில் வண்டி நின்றது. "ஹலோ மிஸ்டர்

— 6ம் பக்கம் —

லோகியோ மறந்தது!

"வடநாட்டிற்கும் தென்னாட்டிற்கும் வித்தியாசம் பாராட்டக்கூடாது. அப்படி பாராட்டுவது மூடத்தனம்" அண்ணாதுரை சோசியலிஸ்ட் கட்சியின் கொள்கைகளையும் திட்டங்களையும் சரிவர உணர்ந்திருப்பாரானால், தாமாகவே தன் கட்சியை கலைத்துவிட்டு சோசியலிஸ்டு கட்சியில் சேர்ந்துவிட்டிருப்பார்."

பொதுவாக எவருமே ஒரு கொள்கையையோ, அல்லது திட்டத்தையோ, ஆதரிப்பதானாலும் அல்லது எதிர்ப்பதானாலும் அதற்குறிய காரணங்களை விளக்கியும், ஆதாரங்களை காட்டியும் தங்கள் முடிவைவலியுறுத்துவர். இதுவே சரியான முறையுமாகும் ஆனால் இப்போது முறைக்கு மாறாக, அகில இந்திய சமதர்ம கட்சியின் தலைவர் டாக்டர் லோகியா அவர்கள் கடந்த பன்னிரெண்டாம் தேதியன்று கடலூரில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசிய பேச்சின் ஒரு பகுதியே நாம் துவக்கத்தில் தீட்டியுள்ளதாகும். வடநாட்டிற்கும் தென்னாட்டிற்கும் வித்தியாசம் பாராட்டுவது மூடத்தனம் என்று கூறியவர், ஏன் பாராட்டக்கூடாது என்பதையோ. பாராட்டுவதனால் ஏற்படும் தீங்கையோ, வித்தியாசம் பாராட்டாமல் இருந்தால் நாம் அடையும் பலாபலன்களையோ விளக்கவில்லை. என்றாலும் விசாரணையின்றி தீர்ப்பளிக்கும் விசித்திரப் போக்கில் உற்ற காரணங்கள் காட்டாமல் உபதேச காண்டம் படித்துள்ளார். வடநாடு, தென்னாடு வித்தியாசம் பாராட்டும் போக்கினை கண்டிக்கும் நோக்கம் உண்மையிலேயே டாக்டர் லோகியா அவர்களுக்கு இருப்பதானால் (ஏக) இந்தியாவின் முன்னேற்றத்திற்கென தீட்டப்பட்டதாக கூறப்படும் இரண்டு ஐந்தாண்டு திட்டத்திலும், காங்கிரஸ் தலைவர்களே ஒப்புக் கொள்கிற அளவிற்கு, வடக்கு தெற்கு வித்தியாசம் பாராட்டப்பட்டிருப்பதை கண்டித்திருக்க வேண்டும். ஏன், ஒரு பெரும் போராட்டமே நடத்தி இருக்க வேண்டும், ஆனால் அவர் அது குறித்து ஏதும் செய்யவில்லை. வடக்கே பல கோடி ரூபாய்கள் செலவில், பக்ரா நங்கல் திட்டமும் தமோதரா பள்ளத் தாக்கு திட்டமும். கோசி அணைக்கட்டு திட்டமும், தெற்கே சில இலட்ச ரூபாய்கள் செலவில் மலம் புழா திட்டமும், மணி முத்தாறு திட்டமும் என்ற முறையில் டில்லி பேரரசால், வட நாடு தென்னாடு என்று வித்தியாசம் பாராட்டியதை கண்டிக்க முன் வராத டாக்டர் லோகியா அவர்கள், வடநாட்டுஅரசாங்கத்தின் வஞ்சனைத் திட்டத்தால், வளமிருந்தும் வாழும் வகையற்ற நிலைமையிலுள்ள தென்னகத்து மக்களிடம் வடநாடு தென்னாடு வித்தியாசம் பாராட்டுவது மூடத்தனம் என்று உபதேசம் புரிவது முறை தவறிய செய்கையாகும். மத்திய சர்க்காரின் ஊதாரித்தனமான செலவுகளை கண்டிக்கும் லோகியா அவர்கள் அவை யாவும் பெரும் பெரும் திட்டங்கள் உருவாகும் வடக்கிலே என்பதை சுட்டிகாட்ட தவறியதேன் தானும் ஒரு வட நாட்டுக்காரர் என்ற நாட்டு பாசத்தாலா, அல்லது வடக்கிலே ஊழல் என்று திக்கைச் சுட்டி பேசினால் திராவிட முன்னேற்றக் கழக கொள்கைக்கு தானே ஆதரவு தந்துவிட்டதாக ஆகிவிடுமே என்ற அச்சமாஎன்பதை அறியஆசைப் படுகிறோம். வடக்கு தெற்கு வித்தியாசம் பாராட்டக் கூடாது என்ற உபதேசத்தின் மூலம் இந்திய ஒற்றுமையை வலியுறுத்தும் இதே தலைவர்தான் இரண்டு தினங்களுக்கு முன்னால் காஞ்சீபுரத்தில் பேசிய கூட்டத்தில் மக்கள் இந்தியில் பேச வேண்டாம் என்று கண்டித்தும் இந்தியிலேயே பேசியுள்ளார் என்றால் இவர்தம் இந்தியஒற்றுமைக் கொள்கையை எவர்தான் ஏற்றுகொள்வர் என கேட்கிறோம்.

அடுத்து இவர் கூறியுள்ளது, அண்ணாதுரை சோசியலிஸ்ட் கட்சியின் கொள்கைகளையும், திட்டங்களையும் சரிவர உணர்ந்திருப்பாரானால் தாமாகவே தன் கட்சியை கலைத்துவிட்டு சோசியலிஸ்ட் கட்சியுடன் சேர்ந்திருப்பார் என்பதாகும்.

ஊருக்கொரு 'பேச்சு' உருப்படுமா?

சோசியலிஸ்ட் கட்சி கொள்கைகளையும் திட்டங்களையும் அறிஞர் அண்ணா சரிவர உணரவில்லையாம்! இதற்கு சுருக்கமாக சொல்ல வேண்டுமென்றால் அறிஞர் அண்ணா அவர்களையும் அவர் தலைமையின்கீழ் பணியாற்றும்திராவிட முன்னேற்றக்கழகத்தைப்பற்றியும் டாக்டர் லோகியா சரியாக தெரிந்துகொள்ளவில்லை என்றே சொல்லலாம். தென்னகத்து அரசியல் நிலைமைகளையும், கட்சிகளின் நிலைமைகளையும், தங்களது வடக்கத்தி தலைவருக்கு சரியானபடி எடுத்து சொல்ல தமிழகத்து சமதர்ம கட்சித்தொண்டர்கள் தவறியிருக்கிறார்கள். அதனால்தான். தி. மு. கழகத்தின் அமைப்பு முறைகளையும், அதன் சரித்திரத்தையும் அறியாமல் கழகம் கலைக்கப்பட்டு சமதர்ம கட்சியுடன் சங்கமமாகி விடும் என்று கற்பனை உலகில் சஞ்சரிக்கிறார் டாக்டர் லோகியா அவர்கள். கடந்த பொது தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் தனது ஜீவாதார இலட்சியமான திராவிட நாட்டு பிரிவினை இலட்சியத்தை விட்டு கொடுக்காமல் எல்லா அகில இந்தியக் கட்சிகளையும் எதிர்த்து போட்டியிட்டு தன் ஜனநாயக கடமையை நிறை வேற்றி அதில் வெற்றியும் பெற்றுள்ளது என்பதை நாடு அறியும். எனவே வேறு ஒரு கட்சியுடன் இணைந்துதான் பலம் பெற வேண்டும்என்ற பலஹீன நிலைமையில் உள்ளதல்ல தி. மு. கழகம். ஆனால் தி. மு. கவுடன் இணைவதின் மூலம் தமிழகத்தில் சமதர்ம கட்சி பலம் பெறும் நிலைமையில் உள்ளது என்டதை அக்கட்சியின் தலைவரின் பேச்சே மெய்ப்பிக்கிறது. தி. மு. காவும், அறிஞர் அண்ணாவும் தங்கள் கட்சியில் வந்துவிட வேண்டும் என்று விரும்பும் டாக்டர் லோகியா அவர்களின் சமதர்ம கட்சியின் சொல்லும், செயலும் திட்டங்களும், நடைமுறைகளும் வேவ்வாறாகவே உள்ளன. தமிழ்நாடு பெயர் போராட்டம் ஒரு பக்கத்தில்—மக்கள் எதிர்த்தாலும் இந்தியில் தான் பேசுவேன் என் மொழி வெறி கொள்வது மற்றொரு பக்கத்தில் என்பது சொல்வேறு செயல் வேறு என்பதேயாகும். அடுத்து ஆங்கிலமொழி அழிப்புப் போராட்டத்தை நடத்துகிற சமதர்மகட்சிக்கு "சோசியலிஸ்ட் என்ற ஆங்கிலப் பெயரை வைத்துக்கொண்டிருப்பது, திட்டம் வேறு நடைமுறை வேறு என்பதற்குச் சான்றாகும். இவைகள் எல்லாம் தென்னகத்து மக்கள் தெளிவாக புரிந்து கொண்ட உண்மைகளாகும். எனவே,

இனி, எத்தனை வட நாட்டுத் தலைவர்கள் தென்னகத்தில் சுற்று பிரயாணம் சேய்தாலும், அரசியல் போராட்ட சிலம்ப வித்தைகள் ஆடினாலும், இந்திய ஒற்றுமை குறித்து உபதேசங்கள் உரைத்தாலும், கடந்த பத்தாண்டுகால டைநாட்டு சர்க்கார் ஆட்சியில் தென்னகத்தார் பெற்றிருக்கிற அனுபவம் அவர்களை ஏமாறவிடாது. ஏமாற மாட்டார்கள் என்பதை வடநாட்டுத்தலைவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். இந்தியா ஒரு நாடல்ல அது பல்வேறு நாடுகளைத் தன்னகத்தே கொண்ட ஒரு துணைக் கண்டம் என்பது பூகோள உண்மையாகும். எனவே, வடக்கும்தெற்கும் என்றும் ஒன்று சேர முடியாது. இரு துருவங்கள். வடக்கு தெற்கு ஒற்றுமை முயற்சி கூடாதது என்பது அல்ல, முடியாதது. என்றாலும் டில்லி ஏகாதிபத்தியம் கடந்த பத்தாண்டு காலமாக முழு முயற்சியில் ஈடுபட்டும் வெற்றி காண முடியவில்லை. மொழி அடிப்படையிலேயும், பிறவகைகளிலேயும் டில்லி பிடிப்பிலிருந்து விலகி தனியாக காணும், பிரிவினை முழக்கம் பல பக்கங்களிலும் கேட்கிறது. எவ்வளவுதான் அரசியல் மூலவர்கள் இந்த பிரச்னையை மூடி மறைத்து முலாம் பூசினாலும் வடநாடு வேறு தென்னாடு வேறு என்ற உண்மை மக்கள் மனதில் இருந்து மறையாது. வடக்கிலிருந்து அடிக்கும் காற்று,வாடை. (உடல் நலத்திற்குக் கெட்டது) தெற்கிலிருந்து வரும் காற்று தென்றல். (இன்பமயமானது) வாடைக்கும் தென்றலுக்கும் உள்ள வேறு பாடு ஏறத்தாழ வடநாட்டிற்கும் தென்னாட்டிற்கும் உண்டு எனலாம். எனவே வடநாட்டிற்கும் தென்னாட்டிற்கும் வித்தியாசம் பாராட்டுவது கூடாது என்பது வாடைக்கும் தென்றலுக்கும் வித்தியாசம் பாராட்டக்கூடாது என்று சொல்வதற்கு ஒப்பாகும். வாடைக் காற்று எப்படி மக்கள் உடல் நலனுக்கு உகந்ததல்லவோ அவ்வாறேதான் வடக்கத்தித் தலைமையை கொண்ட அகில இந்திய கட்சிகள் தென்னகத்து அரசியல் முன்னேற்றத்துக்குகந்ததல்ல; எனவே தென்னகத்துக்கு மக்களுக்கு தேவை எல்லாம் தென்றல்தான். வாடையல்ல! அந்த தென்றல்தான் தென்னாட்டுத் தலைவர் அண்ணாவின் தலைமையில்பணியாற்றும்திராவிடநாட்டு விடுதலை பட்டாளம், பகுத்தறிவு பாசறை, திராவிட முன்னேற்ற கழகமாகும். இத்தகுதென்றலின் மூலம் இழந்த இன்பத்தை மீண்டும் பெற தயாராகிகொண்டிருக்கும் திராவிட நாட்டு மக்கள் இனியும் வடக்கிலிருந்து வீசும் வாடைக்கு ஆட்பட்டு தங்கள் எதிர்கால நல்வாழ்வை போக்கிக் கொள்ளமாட்டார்கள் என்ற நடைமுறை நிலையை டாக்டர் லோகியா போன்றோர் உணர வேண்டும். அகில இந்தியா என்ற ஆகாத கட்டினை அறுத்தெறிந்து அறிஞர் அண்ணா அவர்கள், முன், போர் முறை கூறியதை போல் அகில திராவிட நாட்டு சமதர்ம கட்சி என்ற முறையில் சமதர்மக் கட்சி பணியாற்ற முன்வரும் நாள் வெகு தூரத்தில் இல்லை என்பதை டாக்டர் லோகியா அவர்கள் உணர்வாராக.

—வி. எஸ். கோவிந்தராசன்

> "போற்றுபவர் போற்றட்டும் புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
> ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
> எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 3 || 22—6—57 || இதழ் 40

கயிலாசர் முயற்சி கனிதராது!

திராவிட நாட்டுப் பிரிவினை சக்தி வளர ஆரம்பித்ததிலிருந்து வடநாட்டிலே இருக்கும் மந்திரிமார்களும் அதிகாரிகளும் இந்திய ஒற்றுமைக்குப் பல திட்டங்களைத் தீட்டி வருகிறார்கள். அதுவும் கடந்த பொதுத் தேர்தலுக்குப் பிறகு, எந்த வடக்கத்தித் தலைவரானாலும், அவர்கள் பேசும்போதெல்லாம் தென்னாட்டுக்கும் வடநாட்டுக்கும் பாலம் அமைக்கும் பிரச்சினைபற்றியே பேசத் தலைப்படுகிறார்கள்.

"திராவிட முன்னேற்றக் கழகம் என்றொரு கட்சி தமிழ் நாட்டில் இருக்கிறது. அந்தக் கட்சி, இந்தியாவின் ஒற்றுமைக்குப் பாடுபடுபவர்களுக்கு அதிக வேலையைக் கொடுத்திருக்கிறது' என்கிறார் காங்கிரஸ் தலைவர் தேபர்.

தென்னாட்டு சட்ட சபைப் பெண்களை யெல்லாம் ஒன்று திரட்டி இந்தியாவின் ஒற்றுமைக்குப் பாடுபட வேண்டுமென்கிறார் அய்யங்கார்-அனந்தசயனம்.

"சேரன் வடநாட்டின்மீது படை யெடுத்து வெற்றி கண்டான். அதைப்போலவே அசோகன் தென்னாட்டின் மீது படையெடுத்து வெற்றி பெற்றான். நான் சேர வம்சம் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதைப் போலவே அண்ணாதுரையும் அசோகன் வம்சம் என்று கூறிக் கொள்ளப் பெருமை கொள்ள வேண்டுமென்கிறார் லோகியோ.

இப்படி ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான கண்டுபிடிப்புகளைக் கூறிக்கொண்டிருக்கிறார்கள். இப்போது இன்னொரு கண்டுபிடிப்பு ஒன்று வெளியாகி இருக்கிறது.

வடபிராந்தியத்திலுள்ள மீட்டர் கேஜ் ரயில்வேயையும் தென்பிராந்திய மீட்டர்கேஜ் ரயில்வேயையும் இணைத்து வைத்துப் பேசிய டாக்டர் கட்ஜு அவர்கள்,

"தெற்கையும் வடக்கையும் சேர்த்து வைப்பதுமட்டுமன்றி நாட்டின் பல்வேறு பகுதிகளையும் இந்தப் பாதை ஒன்றுபடுத்தும்" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

பண்டித நேருவிலிருந்து சாதாரணக் காங்கிரஸ் உறுப்பினர் வரை அத்தனை பேரும் தென்னாடும் வடநாடும் ஒன்றுபடுவதற்காகப் புதுப்புது ஆராய்ச்சிகளை நடத்துகிறார்களே தவிர, தென்னாட்டு மக்களைக் கெஞ்சும் தோரணையில் நடந்து கொள்கிறார்களே தவிர, இரு இனத்தாருக்குமிடையே ஏற்பட்டிருக்கிற பிளவைப்பற்றி எந்தத் தலைவரும் சிந்தித்ததாகத்தெரியவில்லை. ஆனால் ஒன்று; இதுவரை பேசிய வட நாட்டு முன்னோடிகள்—நேருவைத் தவிர—வேறு எவரும் தென்னாடு பிரிவதற்கு வழியில்லை என்று துணிந்து கூறவில்லை. அதனால் தான் கெஞ்சும் பாவனையில் அவர்கள் பேசுகிறார்கள்.

இந்தியா பிளவுபடுவதா?

ஒற்றுமை கெடுவதா?

காந்திஜியின் தத்துவம் என்னாவது? நேருஜியைப் பகைத்துக் கொள்வதா?

—என்று 'பஜனைக் கச்சேரி' நடத்துகிறார்கள். எந்தப் பகுதியில் திரும்பினாலும் ஒரே குரல், ஒரே தாளம்தான் கேட்கிறது. இந்திய ஒற்றுமை, காந்திஜி தத்துவம், நேருவின் முக்கியத்துவம் இவைகளெல்லாம் எப்போது ஏற்பட்டன? உலகம் உண்டாகும் போதே இந்த உறவுகள் ஏற்பட்டு விட்டது போல் கதை கட்டுகிறார்கள் தேசீய வாதிகள். காலங் கடந்து விட்டது. இனி எந்தவிதமான வெல்லப் பேச்சும் தமிழ்நாட்டில் எடுபடப் போவதில்லை. எத்தனை லோகியோக்கள், கட்ஜுக்கள் முழங்கினாலும், அவர்களது முழக்கத்தில் ஒலிக்கும் மெல்லிய உண்மை ஒலியையும் மக்கள் புரிந்து கொண்டு விட்டார்கள். ஒட்டி வைத்து ஒற்றுமையின் மகிமை பற்றிப் பேசிப் பயனில்லை என்ற தத்துவத்தை தென்னாட்டு மக்கள் மற்றவர்களுக்கு உணர்த்தி மத்தியஸ்தம் செய்யும் நிலையிலிருக்கும்போது வடநாட்டு போதனை ஒரு போதும் இனிச் செல்லுபடியாகாது என்பதை வடநாட்டுச் சீமான்களுக்கு உணர்த்துகிறோம். ★

பன்மொழிப் புலவர் மணிவிழா நிதி

	முன் இதழ்ப் படி	ரூ.	1097	0—3
ஐதராபாத்	சு. அ. கணபதி	,,	2	00
,,	கு. சீ. கிருஷ்ணமூர்த்தி	,,	2	00
,,	சீ. சீதரன்	,,	2	00
,,	கோ. இராமச்சந்திரன்	,,	2	00
,,	சோ. வாசுதேவன்	,,	2	00
,,	ப. தேவராசன்	,,	2	00
,,	தன்ராஜ் பவுல்	,,	2	00
,,	நாரா. சு. மணி	,,	2	00
,,	மு. கிருஷ்ணமூர்த்தி	,,	5	00
விசயபுரம்	அருணாசலம்	,,	1	00
,,	சைதை பலராமன்	,,	5	00
,,	தஞ்சை ஜகந்நாதன்	,,	1	00
,,	தஞ்சை சோமசுந்தரம்	,,	3	00
,,	துரை முருகேசன்	,,	1	00
,,	கன்யாகுமாரி இராமன்	,,	1	00
	ஈரோடு தர்ம சிவன்	,,	1	00
	த. காந்திமதி	,,	1	00
	மு. பொன்னுரங்கம்	,,	1	00
	காரைக்குடி திருக்குறட் கழகம்	,,	11	00
	சிங்கப்பூர் அரு. நாச்சம்மை	,,	5	00
	சி. கண்ணன்	,,	1	00
	திருக்குறள் முன்னணிக் கழகம்-சென்னை	,,	50	00
	மு. துரையரசு-வேலூர்	,,	0	50
	தாராபுரம் சக்கரை	,,	1	00
	பினாங்கு இளங்கோ சொற்பொழிவுமன்றத்தார்	,,	33	12
சிங்கப்பூர்	க. நடராசன்	ஷி 5		
,,	வ. சண்முகம்	ஷி 5		
,,	கு. சுப்பையா	ஷி 5		
,,	சோ. தெக்ஷிணாமூர்த்தி	ஷி 5	40	41
,,	ரெத்தினம்	ஷி 5		
,,	செல்லத்துரை	ஷி 2		
	மொத்தம்		1275-06	

நிதியனுப்ப வேண்டிய முகவரி

சி. என். அண்ணாதுரை

அறிவகம்

இராயபுரம் : : சென்னை 13.

இன்றைய தமிழ்நாட்டு அரசியலில் யார் எதைப் பற்றிப் பேசுவது என்ற வரைமுறை இல்லாது போய்விட்டது. கட்சிப் பணியும் போராட்ட அலுவல்களுமே அவரவர்களின் அறிவுக்கு எடைக்கல்லாக அமைந்து வருகிறது. இந்தியா மட்டுமல்ல, அகில உலகத்திலும்கூட சென்னை மாநிலம் என்றால் ஒரு பெயர் இருந்தது. புத்திசாலிகள் தமிழ்மக்கள் என்ற கீர்த்தி இருந்தது. ஆனால் இப்போது, கீர்த்தி பெற்றவர்கள், அறிவாளிகள் என்ற பட்டத்தைப் பெற்றவர்கள் எல்லாம் எதிர்க்கட்சிகளில் அமர்ந்திருக்கிறார்கள். கட்சிக் கட்டுப்பாடு என்ற பஞ்சாரத்திற்குள் அறிவாளிகளின் வாதங்கள் அடைபட்டுப் போகின்றன.

சென்ற கிழமைத் தினசரிகளைப் புரட்டிப் பார்த்தால் எத்தகைய 'ஆற்றல்' பெற்றவர்கள் சென்னை மந்திரி சபையை அலங்கரிக்கிறார்கள் என்பது தெளிவாகும். பிரதமரிலிருந்து அவருடைய 'விசுவாசமுள்ள' கக்கன் வரை அத்தனைபேரும், தாங்கள் என்ன பேசுகிறோம் என்பதே தெரியாமல் பேசித் திரிகிறார்கள். சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்றெல்லாம் பேசப்படும் நாட்டில் தன்மானமும் சுயமரியாதையும் எவ்வாறு மதிக்கப்படுகிறது என்பதை மந்திரிமார்களின் விரிவான சொற்பொழிவுகள் படம் பிடித்துக் காட்டுகின்றன.

மாநில முதலமைச்சர் - தமிழ் மக்களின் முன்னோடி - அவர்களுக்கு ஒரு ஆபத்து என்றால் பொறுப்பாக நின்று பணிபுரியக் கடமைப்பட்டவர் - அவர் ஒரு இடத்தில் பேசியிருக்கிறார் "'தமிழ்நாடு' பெயர்ப் போராட்டம் பற்றி பேசப்படுகிறது. ஏழைகள் கஷ்டப்படும்போது இது தானா இப்போது முக்கியமான வேலை" இது காமராசரின் பேச்சு. ஏழைகள் சோற்றுக்கின்றிக் கஷ்டப்படுகிறார்களாம்! இப்போது தமிழ்நாடு பெயர்ப் போராட்டம் அவசியதானா என்கிறார். கேவலம்! தமிழ்நாடு என்ற பெயர் தன் தாய்நாட்டுக்கு இல்லையே என்ற உணர்ச்சி இல்லை, சுயமரியாதை கிடையாது என்பதால் காமராசரை நாம் குறைபட்டுக் கொள்ளவில்லை. என்று அவர் காங்கிரசில் சேர்ந்தாரோ-வளர்ந்தாரோ, பொறுப்பேற்றுக்கொண்டாரோ, அன்றே நாம் முடிவு கட்டியதுதான், அவருக்கு சுயமரியாதை காய்ந்தது என்பதாக. ஆனால் மானம் காக்கத்தான் திறனில்லை, யோக்யதை இல்லை, வகையில்லை என்றால் தன்னுடைய பாதுகாப்பில் அடங்கிக் கிடக்கும் ஏழைகளுக்குக்கூடவா வாழ்வழிக்க வகையில்லை! இது அவமானமில்லையா? அதிகாரம், அந்தஸ்து, ஆள்பலம், அத்தனையையும் தன் வசம் வைத்துக் கொண்டு, நாட்டின் பெயரையும் கெடுத்துவிட்டு, மக்களுக்கும் சோறு இல்லையே என்றால் இதைக் காட்டிலும் கையாலாகாத ஆட்சியை நாம் எங்கே போய்ப் பார்க்கப்போகிறோம். மானம் காக்கவும் வகையில்லை, ஏழைகளுக்குச் சோறு போடவும் வகையில்லை என்றால் இவர்களெல்லாம் மந்திரிகளென்று சொல்லிக்கொண்டு வெளியில் வரமுடியுமா வேறொரு நாடாக இருக்குமானால்?

காமராசரை இன்னொன்று கேட்போம். ஏழைகள் அவதிப்படும்போது சுதந்திரப் போராட்டம் கூடாது என்று எந்தத் தலைவன் சொல்லியிருக்கிறான்? போராட்டம் தொடங்குவதே ஏழைகள்தானே! சர்க்காரை மிரட்டுவதே ஏழைகள்தானே! எதிர்த்துக் கேட்பதே ஏழைகள் தானே! வேறு எந்த ஏழைகளுக்காகக் காமராசர் பரிந்து பேசுகிறார்! அந்த ஏழைகள்தானே அய்யா, "காமராசரே நீர் தமிழர் தானா? ஏன் உங்கள் நாட்டுக்கு தமிழ் நாடு என்று பெயர் வைக்கவில்லை?" என்று கேட்கிறார்கள். அந்தப் படையை வழிமறித்துத் தான் கேட்கிறார், 'கஞ்சிக்கு இருக்கிறதா?' என்று. சோற்றுப் பட்டாளம் ஒன்று இருந்தது. 1947 முடிந்ததும் அந்தப் பட்டாளம் கலைந்து இப்போது சோற்றுக்கு முக்கியத்துவம் தரும் இடங்களில் குடிபுகுந்து விட்டது. இந்தப் பட்டாளம் மானத்திற்காகப் போராடும் பட்டாளம். இந்தப் பட்டாளம் வேறு, எதிலும் சேராத ஏழைகள் வேறு என்று பிரிப்பது வடிகட்டின அரசியல் அயோக்யத்தனமாகும்.

வசதியுள்ளவர்கள் காங்கிரசில் இருக்கிறார்கள்; பதவியில் இருக்கிறார்கள். அவர்கள் எந்தப் போராட்டத்திற்கும் வரமாட்டார்கள். மற்றவர்கள் வேறு வேறு கட்சிகளில் இருக்கிறார்கள். அவர்கள் அனைவரும்தான் தமிழ்நாடு வேண்டும் என்கிறார்கள். வேறு யார் இருக்கிறார்கள் கட்சி சார்பின்றி! தமிழ்நாடு போராட்டம் முக்கியமா என்று காமராசர் கேட்கிறார், கட்ஜு அல்ல! பந்த் அல்ல! காமராஜ்! அவமானம்! அவமானம்!

இன்னொரு மந்திரி இருக்கிறார், நமது அகராதிப்படி அவர் மஞ்சள் கடதாசி மந்திரி - பெயர் பக்தவத்சலம். அவர் மேடையில் பேசும்போது நடை வண்டி ஓட்டித் திரியும் பாலகனைப்போலிருப்பார். மூக்குவழியும். அவருக்கு இருக்கிற புத்திசாலித்தனத்திற்கு, அந்தமேதை மற்றவர்களைக் கேலி செய்கிறார். அண்ணா அவர்களும், லோகியோவும் தனித்தனியாக வேறு வேறு ஊர்களில், தமிழ்நாடு போராட்டம் பற்றிப் பேசியதை வைத்துக்கொண்டு அந்த 'மீஞ்சூர் மூதறிஞர்' கேலியாகப் பேசியிருக்கிறார். எங்கே? எந்த வட ஆற்காடு மாவட்டம் காங்கிரசை பலமுறை மூக்கறுத்து வேடிக்கை பார்த்ததோ அந்த மாவட்டத்து ஊழியர் கூட்டத்தில் பேசியிருக்கிறார். அறிஞரும் லோகியோவும் ஒன்றுசேரப் போகிறார்களாமே என்று ஏளனமாகப் பேசியிருக்கிறார். ஊரார் பணத்தில் வெளிநாடு போய் அங்கே இருக்கிற இடிந்த கோயில்களையும் ஆண்டிப்பண்டாரங்களையும் பார்த்து விட்டு வந்ததற்கே நாடு இன்னும் சிரித்துக்கொண்டிருக்கிறது! ஓட்டுக்கேட்ட முறையும், வாக்குறுதியளித்த தன்மையும் இன்னும் சந்தியில் கிடந்து சீரழிகிறது. இந்தப் பெரியவர் மற்றவர்களைக் கேலி செய்கிறார். 'அறிஞரும் லோகியோவும் ஒன்று சேரப் போகிறார்களாமே' என்று. ஆற்காடு ராமசாமி முதலியார், லட்சுமணசாமி முதலியார் போன்றவர்களெல்லாம் 'அண்ணா துரையா?' என்று பெருமூச்சு விடுகிறார்கள்; இந்த 'மராமத்து' மந்திரி கேலி செய்கிறார். கேலி செய்வதற்கும் ஒரு யோக்யதை வேண்டாமா? அதுகூட இல்லையே பக்தவத்சலத்தினிடம்! அந்தோ பரிதாபம்! அவருக்கு நம் அனுதாபம்!

'இவர் காமராசரின் அத்தியந்த நண்பர்-சீடர் - பெயர் கக்கன். வீட்டில் பெற்றோர்கள் வைத்த பெயர்தான். இவர் எம். பி. யாக இருந்தபோது ஊமையாகவே இருந்தார். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவரான பிறகு சில இடங்களில் மூச்சுவிட்டிருக்கிறார். மந்திரியான பிறகு 'என் படிப்பு இவ்வளவுதான்' என்பதை நிரூபித்து விட்டார். 'நான்தான் காமராசரின் உண்மையான பக்தன்' என்பதை நடைமுறைப் பூர்வமாகக் காட்டி விட்டார்.

'ரோமாபுரி ராணிகள்' எழுதுகிறவர்கள் காங்கிரசைக் கண்டிக்கிறார்கள்' என்கிறார்.

'ரோமாபுரி ராணிகள்' புத்தகம் எழுதுவது காங்கிரஸ்காரர்களுக்குக் கேவலமாகப்படுகிறது. ஆனால் அந்தக் கேவலமான புத்தகம்தான் அவர்கள் மனதைக் கவ்வுகிறது! எத்தனையோ புத்தகங்களை அண்ணா அவர்கள் எழுதினார்கள்.

ஆரியமாயை
நாடும் ஏடும்
நிலையும் நினைப்பும்
கம்பரசம்
ஆலையூரார் உபதேசம்
1857—1947
பணத்தோட்டம்

—இதுபோல பல நல்ல புத்தகங்களை அண்ணா அவர்கள் தமிழகத்துக்குக்குப் படைத்திருக்கிறார். அரசியல் தலைவர்களெல்லாம் படித்துப் படித்து இன்புறுகிறார்கள். ஆனால் காங்கிரஸ் தலைவர்களுக்கு ரோமாபுரி ராணிகள்தான் படுகிறது. என்ன செய்வார்கள். காமராசரைப் போன்ற பிரம்மச்சாரிகளுக்கு அந்தப் புத்தகங்கள் தட்டுப்படுவதில் ஆச்சரியமில்லைதான்! தலைப்பிலே மயங்குபவர்கள். உள்ளே படித்தால் ரோமாபுரி ராணிகளை எரிக்க அல்லவா கட்டளை இடுவார்கள்! 'ரோமாபுரி ராணிகள்' அழிந்த சாம்ராஜ்யத்தின் கண்ணீர்க் காதை என்பதை இவர்கள் எங்கே தெரிந்து கொள்ளப் போகிறார்கள்.

புத்தகம் எழுதுபவர் சர்க்காரைக் கண்டிக்கக்கூடாதாம்! ஒரு சர்க்காரை வேறு யார்தான் கண்டிப்பது? காமராசரைப்போல், கக்கனைப்போல் படிக்காதவர்களும், பக்தவத்சலத்தைப்போல் ஜனநாயகத்தைக் கொன்றவர்களும்தான் கண்டிக்கத் 'தகுதி' பெற்றவர்களா? மானங்கெட்ட அரசியல்! எத்தனை நாளைக்கு மக்களை ஏமாற்ற முடியும்! இந்தக் கரிய திருமேனிகள் எவ்வளவு காலத்திற்குக் கொலுவிருக்கப் போகிறார்கள். ★

ரஷ்யா, ஏகாதிபத்ய நாடா, முற்போக்கு சக்தியா?

ஒவ்வொரு சிறந்த கட்டுரைக்கும் ரூ 25 பரிசளிக்கப்படும்.

- ★ தாக்காமல், காரண காரியங்களை மட்டும் விளக்க வேண்டும்.
- ★ ரஷ்யாவின் உள்நாட்டு நிலவரங்களை ஆதாரங்களோடு காட்டவேண்டும்.
- ★ ஹங்கேரி நிகழ்ச்சிகளை எடுத்துக்காட்டலாம்.
- ★ 'தென்றலி'ல் மூன்று பக்கங்களுக்குமேல் போகக் கூடாது.

முடிவு தேதி 1-8-57

தென்றல்
வெண்பா ஆயிரம்

கிடைக்குமிடம்

மலர் நிலையம் : : பிராட்வே, சென்னை-1.

குறிப்பு :—'தென்றல்' முகவரிக்கு முன்பு பணம் அனுப்பியவர்களுக்கும் மலர்நிலையத்திலிருந்தே புத்தகங்கள் அனுப்பப்பெறும். தாமதத்திற்கு மன்னிக்க.

உண்மைக் கதை

— 2ம் பக்கத் தொடர்ச்சி —

பஞ்சநாதம்! இப்படி எங்கே இருந்து?" என்று கேட்டுக்கொண்டே அவரருகில் வந்தமர்ந்தார் பாண்டுரங்கம், பஞ்சாமிர்தத்தின் நண்பர். நீண்ட பயணத்திற்கு நல்ல பேச்சுத்துணை கிடைத்ததில், மிக்க மகிழ்ச்சி கொண்டார் பஞ்சாமிர்தம்.

"கதம்ப"த்தை வாயாரப் புகழ்மாலை பாடினார் பாண்டுரங்கம். "கதம்ப"த்திற்கு ஈடுவேறெதுவுமில்லை என்று பாராட்டினார். வாய் ஓய இருவரும் பேசினர்.

தூக்கத்தின் அறிகுறியாகப் பஞ்சாமிர்தம் கொட்டாவிவிட்டார். படுக்கையை விரித்துப் படுத்தார்.

தமக்குத் தூக்கம் வரும்வரை, படிப்பதற்காக, பஞ்சாமிர்தத்தின் பையிலிருந்த புத்தகங்களைப் புரட்டினார் பாண்டுரங்கம். கையெழுத்துச் சுவடியைப் பார்த்தார். "உண்மைக் கதை" என்ற தலைப்பைக் கண்டதும், அதை ஆவலுடன் படிக்கத் தொடங்கினார். படிக்கப் படிக்க அவர் முகத்தில் பலவித மாற்றங்கள் ஏற்பட்டன. திகைத்தார், திடுக்கிட்டார். மனம் இட்ட கட்டளையை மீறமுடியாமல், அவர் வெடவெடத்த கைகள், தூங்கிக்கொண்டிருந்த பஞ்சாமிர்தத்தை தட்டியெழுப்பின.

கண்ணைக் கசக்கிக்கொண்டு எழுந்து உட்கார்ந்தார் பஞ்சாமிர்தம்.

★

பிரசுரத்திற்காக எழுதிய கதையல்ல அந்த வாலிபன் தந்தது என்பதை, தமக்கு அவன் எழுதியிருந்த கடிதத்தைப் படித்தபிறகு தெரிந்து கொண்டார் பஞ்சாமிர்தம். "மனமிரங்கி இதனைப் பொறுமையுடன் படியுங்கள். உங்களால் நிச்சயம் பயன் கிடைக்கும் என்ற நம்பிக்கையில், விவரமாக எல்லாவற்றையும் எழுதியிருக்கிறேன். பிரசுரத்திற்காக எழுதிய கதையல்ல இது; வாழத் துடிக்கும் இரண்டு உயிர்களுக்கு வாழ்வளிக்கக் கோரும் தூதுவனுகும் இது."

பஞ்சாமிர்தத்தின் தூக்கம் பறந்து போயிற்று. கதையை வேகமாக விழிகளால் விழுங்கினார். படித்து முடித்ததும், "அய்யோ! மோசம் செய்துவிட்டேனே" என்று அலறினார்.

மாலதியின் காதலன் சந்திரன். ஒரே ஊரில் பிறந்து வளர்ந்தவர்கள். மனதால் ஒன்றுபட்டவர்கள். மணம் செய்துகொண்டு வாழ மனமாளிகை கட்டி, இன்ப நினைவுகளைக் குடியேற்றியிருந்தார்கள் இருவரும். சாதிபேதத்தைக் காட்டி வழக்கப்படி சமுதாயம் குறுக்கே நின்றது. மாலதியின் பெற்றோர் விரைவில் திருமணத்தை முடிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். குமரேசன் தென்பட்டான் அவர்கள் கண்களுக்கு. திருமண ஏற்பாடுகள் நடந்தன. "கதம்பம்" ஆசிரியர் பஞ்சாமிர்தத்தின் தலைமையில் திருமணம் நடைபெறுவதாக பத்திரிகை போடப்பட்டது. விவரமறிந்த சந்திரன், வெட்டிப் பிரிக்கப்பட்ட காதலை ஒட்டிப் பிணைத்துக்கொள்ளலாம் பஞ்சாமிர்தத்தின் உதவியைக்கொண்டு என்ற எண்ணத்தில், பஞ்சாமிர்தத்தின் உதவியை நாடினான்.—இதுதான அந்தக் கதையின் சாரம்.

"இந்த விவரத்தை முதலிலேயே படித்திருந்தால், மாலதி வாழ்வைப் பாழாக்கியிருக்க மாட்டேனே! செய்துவிட்டேனே வளம் உள்ளங்களுக்கு மாபெருந் துரோகம்!" என்று வேதனையோடு கூறினார் பஞ்சாமிர்தம். பாண்டுரங்கமும் ஏக்கப் பெருமூச்சு விட்டார்.

★

கதையைக் கொடுத்துவிட்டுப் போய் மாலை வந்து, பஞ்சாமிர்தத்தைக் காணுமல் ஏமாற்றத்துடன் திரும்பிச்சென்ற சந்திரன், மீண்டும் "கதம்பம்" காரியாலயத்திற்கு வரவேயில்லை. அவன் என்னவானுன் என்றே தெரியவில்லை.

சில மாதங்களுக்குப் பிறகு...

பல்நாட்களாக படுத்த படுக்கையாக இருந்து நோய் தீராமல் மாலதி இறந்துவிட்டாள் என்ற வேதனைக்குரிய செய்தி கிடைத்தது பஞ்சாமிர்தத்திற்கு! குமரேசனையும் மாலதியையும் கணவனும் மனைவியுமாக வாழவைக்க எந்த மணவாழ்த்துக்களும் பயன்படாமல் போய்விட்டன.

இப்போதெல்லாம் குமரேசன் "உண்மைக் கதை" எழுதுவதில்லை. "கதம்பம்" வார இதழ் நின்றுவிட்டது மட்டுமே அதற்குக் காரணம் என்று சொல்ல முடியாது. ★

தைமூரின் காதலி

— 7ம் பக்கத் தொடர்ச்சி —

வுக்குமீறி அக்கரை எடுத்துக்கொண்டாள். பாதுஷாவுக்கே அது ஆச்சரியமாக இருந்தது. எதையுமே அவசரப்பட்டு முடிவு கட்டாத தைமூர், ஷைநபூவின் நடிப்பில் இளகிவிட்டார்.

விழாவுக்கு முதல்நாள் இரவு, ஷைநபூ, மைம்பொன் அறைக்கு வந்தாள். "மைம்பொன், உனது பிறந்ததின விழாவுக்கு நான் ஒரு பரிசு தரப்போகிறேன். இன்று இரவு அந்தப் பரிசைத் தருகிறேன். விடியப் போகும்போது அந்தப் பெட்டியைத் திறந்துபார். இரண்டு வைரக்காப்புகள் இருக்கும் எடுத்துக்கொள்!" என்று கனிவோடு சொன்னுள் அந்தக் கனிவில் விஷம் எங்கே மறைந்திருந்தது என்று யாராலும் சொல்லமுடியாது. அவ்வளவு குழைவாகச் சொன்னுள். அந்தக் குழைவில் இரக்கம் கொட்டியது. அன்பு நிழலாடியது. ஆனல...?

ஷைநபூ, மைம்பொன்னின் நினைவுப் பரிசாக ஒரு அழகிய தந்தப் பெட்டியை அவளிடம் தந்தாள். மைம்பொன் அந்தச் சிங்காரப் பெட்டியை தன் தலையணைக்குப் பக்கத்தில் வைத்தபடி தூங்கினுள்.

விடிவதற்கு இரண்டு நாழிகைக்குமுன் மைம்பொன் எழுந்துவிட்டாள். அப்போது முதற்கொண்டே அரண்மனையிலும், அந்தப்புரத்திலும் விழாவிற்கான ஏற்பாடுகள் துரிதமாக நடந்துகொண்டிருந்தன. மைம்பொன் முதல் முறையாக அல்லாவை வணங்கிவிட்டு, அக்கா அன்புடன் தந்தப் பெட்டியைத்திறந்தாள்.

கோரம்!... கோரம்!! சோம்பிச் சாய்ந்த நெற்கதிரைப்போல் மைம்பொன் சோர்ந்து விழுந்தாள். சித்திர வேலைப்பாடுகள் நிறைந்த அந்தத் தந்தப்பெட்டிக்குள்ளிருந்து ஒரு அழகிய பூநாகம் நெளிந்தோடி வந்தது!

எழிலரசி மைம்பொன்னின் பவழ உதடுகள் நுரைதள்ளின. களறியில் ஓடிய காளை இளைப்பதைப் போல் மூச்சுத் திணறியது அவளுக்கு.

"அக்கா, நீயா எனக்கு இப்படிச் செய்யவேண்டும்! பாதுஷா என்னிடம் நடந்துகொண்ட விதங்கள் எல்லாம் உன்னுடைய சம்மதத்தின் பேரிலே நடப்பதாக எண்ணிவிட்டேன், பேதை! தங்கைதானே நான், தட்டிச் சொல்லியிருக்கக் கூடாதா? ஆண்களின் கண்களில் அழகிகள் படக்கூடாது என்பார்களே, இங்கே நான் உன்னுலேதானே அக்கா அறிமுகமானேன். ஒரே நேரத்தில் இரண்டு இளம் பெண்களை கூட்டிபோகக் கூடாது என்றுதானே அக்கா, அம்மா உன்னை மட்டும் பாதுஷாவிடம் அழைத்துப்போனுர்கள்! அதற்குள்ளாக மறந்துவிட்டீர்களா? அக்கா! நான் சாவதைப் பற்றிக் கவலையில்லை' இளமை அழியுமுன் சாகிறேன். என்னுடைய முதுமையை நிலைக் கண்ணுடியில் பார்த்துக் கவலைப்படுமுன் சாகிறேன் ஆனுல் உடன் பிறந்தவளால் சதிசெய்து கொல்லப்பட்டல்லவா சாகிறேன். சரித்திரம் மறவாது சகோதரி. எதிரியை எதிரி மாய்ப்பதைக்கூடச் சரித்திரம் மறந்துவிடுகிறது. ஒரே குடும்பத்திற்குள் நடக்கும் சோகச் சித்திரத்தைச் சரித்திரம் விட்டு வைத்ததில்லை" என்று உருக்கமாகப் பேசினுள் மைம்பொன். கணத்திற்குக் கணம் அவள் தொண்டை கம்மிக்கொண்டு வந்தது. அவள் தலைசாய்ந்தாள். இதையெல்லாம் ஒளிந்து நின்று கேட்டுக்கொண்டிருந்த தைமூர் இடிபோல் சிரித்துக்கொண்டு ஓடிவந்து ஷைநபூவின் கரத்தை விலங்கைப்போல் பற்றினுன்.

(தொடரும்)

தென்றல்

திரை

ஆண்டு சந்தா 3-0 தனிப் பிரதி 1⁄4 காசு

மாதம் இருமுறை 1, 15 தேதிகளில்

ஆசிரியர்கள்
ஜாம்பவான் : பத்மநாபன்

தெள்ளமுதுக் கட்டுரைகள்
தேன்சொட்டும் பகுதிகள்
அத்தனையும் உண்டு

ஏஜன்ஸிக்கு விண்ணப்பிக்கவும்

விவரங்கட்கு

திரை கன்சர்ன்ஸ்,
40, பீட்டர்ஸ் ரோட், சென்னை-14.

தைமூரின் காதலி

தென்னரசு

10

பூக்காரி திரும்பிப் பார்த்தாள்.

சுருண்ட செப்பட்டை மயிருடைய அந்தக் கிழட்டு வீரன் பின்னே ஓடி வந்துகொண்டிருந்தான்.

''அம்மணீ!''

''ராஜாவுக்கு ரோஜா வேண்டுமா?'' என்று பரிவோடு கேட்டாள் பூக்காரி.

''நீங்கள் கொடுத்து வைத்தவர்களாகிவிட்டீர்கள். பாதஷாவுக்கு உங்கள் குடும்பத்தின்மீது கருணை பிறந்துவிட்டது. கை கொடுக்க வேண்டுமென்கிறார்.''

''நாங்கள் பாக்யசாலிகள். என்னைப் பற்றிக்கூட எனக்குக் கவலையில்லை. என் கண்மணிகள் கவலைதான் என்னை அரிக்கின்றன''-கவலையோடு சொன்னாள் பூக்காரி.

''விசனப்படாதீர்கள்! விமோசனம் பிறந்துவிட்டது. நாளை இரவு பாதுஷா, தங்களையும் தங்கள் புத்திரிகளையும் அரண்மனைக்கு வரும்படி கட்டளையிட்டிருக்கிறார்கள்.'' என்றான் கிழவன்.

மறுநாள் இரவு பூக்காரி தனது மூத்தமகள் ஷைநபூவை அழைத்துக்கொண்டு சாமற் சண்டிலுள்ள பாதுஷாவின் அரண்மனைக்குப் போனாள். பலருக்கு வியப்பாக இருந்தது. தைமூரே அவர்களை அன்போடு அழைப்பதென்றால் தனி விசேடமிருக்காதா என்ன?

சேமியா கூறிக்கொண்டு வந்த இந்த இனிய கதையின் முதல் முடிவு உப்புச்சப்பற்றது என்பதை அறிந்த உம்மதுல் குறுக்கிட்டுப் பேசத் தொடங்கினாள்.

''ஷைநபூவை பாதுஷா மணந்துகொண்டார். அப்படித்தானே!''-என்று கேட்டாள்.

''அதுதான் எல்லோருக்கும் தெரிந்ததாயிற்றே! அந்த ஷைநபூ ஏன் இப்போது தனி இடத்தில் இந்துத் துறவியைப்போல் வாழ்கிறாள் என்பது தானே கதை!'' என்று சுருக்கென்று பதில் சொன்னாள் சேமியா.

''கதைக்குள் கதையா? சரி சொல்லுங்கள்!''-என்று கதை கேட்க தன்னைத் தயார்படுத்திக் கொண்டாள் உம்மதுல்.

சேமியா தொடர்ந்தாள்:

ஷைநபூ சித்திரப் பதுமை. சிரித்தால் முத்துக் கொட்டும் என்பார்களே, அப்படி அழகி. செம்பட்டுப்பாதம்! அதுதொடும் அலை கூந்தல். நீதான் அவளைப் பார்த்திருக்கிறேன், பேசியிருக்கிறேன் என்கிறாயே! பழம் நழுவிப் பாலில் விழுந்ததைப்போல், அத்தகைய அழகுக்கு இருப்பிடமாய் அரண்மனை கிடைத்தது. ஏங்கிக் கிடந்தவர்களுக்கெல்லாம் கிடைக்கவில்லை; பாதுஷாவைக் கவிழ்க்க மோக வலை வீசியவர்கள் எல்லாம் ஏமாந்தார்கள். ஷைநபூவுக்குக் கிடைத்தது; ஆனால்......அந்த வாழ்வு...?

''...ஏன் நிலைக்கவில்லை? பாதுஷாவை வஞ்சித்து விட்டாளா ஷைநபூ?'' ஆவலோடு கேட்டாள் உம்மதுல்.

''இல்லை. ஷைநபூ சாமற்கண்டு அரண்மனைக்கு வந்து ஆறு மாதங்களுக்குப் பிறகு ஒருநாள், ஷைநபூவின் தங்கை **மைம்பொன்** அரண்மனை விருந்தாளியாக அழைக்கப்பட்டிருந்தாள். அவளுக்கு ராஜோபசாரம் நடந்தது. பாதுஷாவின் புது மனைவிக்குத் தங்கையென்றால் உபச்சாரம் குறைவாகவா இருக்கும்! அத்தரும் சந்தனமும் அரண்மனை அஸ்திவாரத்தைக்கூடக் குடைந்தன. அந்தப்புரத் தலைவியிடம் பட்டயம் பெற தாதிப்பெண்கள் ஆளாகப் பறந்தார்கள். விருந்து தினத்தன்று ஷைநபூ தனது கணவனிடம் மைம்பொன்னை அறிமுகம் செய்துவைத்தாள். அக்காவைப்போல் தங்கையும் அழகி. அவள் மாடப்புறா என்றால் இவள் மணிப்புறா. அவள் பனி ரோஜா! இவள் பவழமல்லிகை! ஒரே வயிற்றில் பிறந்தவர்களானாலும் இப்படி போட்டி போட்டுக்கொண்டு அழகு வளர்ந்ததை யாரும் பார்த்திருக்கமாட்டார்கள்.

முதல் முறையாக தைமூர் மைம்பொன்னைப் பார்த்த பார்வையே அவளுக்குச் சுளீர் என்று முள் தைத்தது போலிருந்தது. ஷைநபூ அருகிலிருந்தாலும் மைம்பொன் சமாளித்துக் கொண்டாள். ஒரே சிரிப்பில், ஒரே பார்வையில் ஒன்பது விதமான பதில்களைச் சொல்வார்களே பருவப்பெண்கள்! தைமூர் அந்தப் பதில்ப் பார்வையை எப்படித்தான் புரிந்துகொண்டாரோ தெரியவில்லை.

நடுநிசி!

விலையுயர்ந்த வாசனைப் புகையிலையைச் சுருட்டிப் பற்ற வைத்துக்கொண்டு பூங்காவில்தன்னந் தனியராய் உட்கார்ந்திருந்தார். அந்த நேரத்தில் அயலார் யாராவது பார்த்திருந்தால், ஆட்டுக்காரனைப்போல் இருக்கும் இவரது பெயரைக் கேட்டா அகிலம் நடுங்கமெடுத்து நிற்கிறது என்று மூக்கில் விரல் வைத்திருப்பார்கள்!''

உம்மதுல் சும்மா இருக்காமல் சந்தேக நிவர்த்திக்காக ஒரு கேள்வியைக் கேட்டாள்.

''ஏம்மா, எல்லாவற்றையும் பார்த்தது மாதிரியே சொல்கிறீர்களே, இந்தச் சம்பவம் எப்போது நடந்தது?'' என்றாள்.

''பத்து வருஷத்துக்கு முன்னால் நடந்தது. எனக்கு உங்கப்பாதான் இதையெல்லாம் சொன்னார். பாதுஷாவின் அரண்மனை ரகசியங்களில் இதுவும் ஒன்று என்பார்கள்!'' என்று சொல்லிவிட்டு சேமியா கதையைத் தொடர்ந்தாள்:

பாதுஷா தனியாக உட்கார்ந்திருக்கும்போது மைம்பொன் ஆண் வேடம் போட்டுக்கொண்டு அங்கே வந்துவிட்டாளாம்! தங்கையை அக்காள் அறிமுகம் செய்துவைத்ததின் வினையைப் பார்த்தாயா? அன்றிரவே மைம்பொன் தைமூரைச் சந்தித்துவிட்டாள். இரவு முழுதும் அவர்கள் பூந்தோட்டத்திலேயே ஆடிப்பாடித் திரிந்திருக்கிறார்கள். விடிவதற்கு சற்று முன்பாகத்தான் மைம்பொன் படுக்கையறைக்குப் போயிருக்கிறாள். போகும்போது ஷைநபூவின் கட்டிலைக் கடந்துதான் போகவேண்டியிருந்ததால் அந்த இடத்தில் மாத்திரம் பட்டுப்போல் மெதுவாக நடந்துபோயிருக்கிறாள். ஆனால் அருகில் போன பிறகுதான் தெரிந்திருக்கிறது; **ஷைநபூ கட்டிலில் இல்லை!** எங்கே போயிருப்பாள்? தன்னைப்போல் அக்காளும் ஏதோ தவறு செய்யக்கூடும் என்றே மைம்பொன் நினைத்தாள்.

மைம்பொன்னுக்குத் தூக்கம் வரவில்லை. பருவப்பெண்கள், சாதாரண காலங்களிலேயே சரியாகத் தூங்கமாட்டார்கள்; புரளுவார்கள். முணங்குவார்கள். புலம்புவார்கள். அதுவும் குழப்பத்தில் சிக்கிய சின்னப் பெண்களுக்கு தூக்கமா பிடிக்கும்! பிரமை பிடித்தவளைப்போல் மல்லாந்தபடியே படுக்கையில் கிடந்தாள் மைம்பொன். இரண்டு நாழிகைகளுக்குப் பிறகு கருப்புத் துணியால் முக்காடிட்டபடி ஷைநபூ படுக்கையறைக்கு வந்தாள். மைம்பொன் இன்னும் தூங்கவில்லை என்பது ஷைநபூவுக்குத் தெரியும். ஷைநபூ அப்போதுதான் வருகிறாள் என்பதும் மைம்பொன்னுக்கு தெரியும். ஒருத்திவிடுகிற பெருமூச்சு மற்றொருத்திக்குக் கேட்கிறது. ஆனால் இருவரும் பேசிக்கொள்ளவில்லை.

மறுநாள் காலை! இருவரும் நெடுநேரம் தூங்கினார்கள். பாதுஷா குளித்துப் புத்தாடை பூண்டு வழக்கம்போல் அந்தப்புரம் வந்தார். இருவரும் கண்ணயர்ந்து கிடந்தார்கள். பாதுஷா செருமினார். மைம்பொன் எழுந்து உள்ளே போய்விட்டாள். ஷைநபூ முன்கூட்டியே விழித்துக்கொண்டாலும் எழுந்திருக்கவில்லை. ஓரக்கண்ணால் தைமூரைப் பார்த்தாள். தைமூர் மைம்பொன்னின் எழிலையே விழிகளால் குடித்துக்கொண்டிருந்தார். ஷைநபூ கண்களை மூடிக்கொண்டாள். பிறகுதான் தைமூர் உரிமையோடு கையில் வைத்திருந்த வெள்ளிப் பிரம்பால் ஷைநபூவைத் தட்டினார். அலெக்சாண்டரின் குதிரையைப் போன்ற உடற்கட்டுக்கொண்ட ஷைநபூ துள்ளிக் குதித்து எழுந்தாள்.

''ஓ! அசதி மிகுதியோ!''

''கண் விழிப்பு பாதுஷா!''

''என்ன, கவி புனைந்தாயா?''

''ஆற்றலில்லை பிரபு!''

''பின், கண் விழிக்கக் காரணம்?''

''பழைய வாழ்க்கையின் இன்ப நினைவுகள்தான் காரணம்!''

''என்ன சொல்கிறாய் ஷைநபூ?''

''தாயோடு நாங்கள் வாழ்ந்த காலத்து அமைதியையும் ஒற்றுமையையும் எண்ணி எண்ணி மகிழ்ந்துகொண்டிருந்தேன்.''

''ஓஹோ! தரித்திரத்தின் பெருமையைச் சொல்கிறாயா?'' என்று கிண்டலாகக் கேட்டார் தைமூர்.

அதற்குமேல் ஷைநபூவால் எதுவும் பேச முடியவில்லை. துக்கம் தொண்டையின் கோட்டை வாசலை மூடிவிட்டது. கண்ணீரைத் துடைத்துக்கொண்டு உள்ளே போய்விட்டாள்.

கொஞ்ச நாட்களுக்குப் பிறகு மைம்பொன்னுக்கு பதினெட்டாவது பிறந்தநாள் வந்தது. தைமூர் அந்த விழாவை விமரிசையாக நடத்த எண்ணினார். அதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றன. ஷைநபூ, தங்கை மைம்பொன்னின் பிறந்தநாள் விழாவில் அவ

— 6 ம் பக்கம் —

காதலோ பெரிதே !

[பொருள் தேடச் சென்ற தலைவன், திரும்பி வந்து நிற்கின்முன். தோழி வருகின்ருள்.]

தோழி : கைகட்டி வானத்தை ரசிக்கின்ற கலைஞரே! மை இட்ட என் தலைவியின் விழி புகுந்து தரையிட்ட மீன்போல்- காதலால் தலைவியை தவிக்கச் செய்தவர் தாங்கள் தானு?... ஆற்றுநீர் மண்ணைத் தழுவிச் செல்வதுபோல் - காற்றும் 'இடையே' புகாதபடி, கலவி செய்து, இன்றவளை புலம்பைச் செய்த பூபதி நீங்கள் தானு?...

தலை : ஆமாம்! 'என் உள்ளான், ஆவன்? பொன் இலன் ஆயின்' ஒருவன் என்றே பொருள் தேடப் போனேன். கடமை தடுத்தது. என்னை அவளெங்கே?

தோழி : காவல் தடுத்தது. வெள்ளத்தின் பெருக்கைப் போல் கலையும் அழகும் பெருக்குக்கொண்டு, என் உள்ளத்தில் நிலவாகப் புகுந்த அவள் வந்த பின்னே-பள்ளத்தில் விழுந்திருக்கும் குருடன் நான் பார்வை பெறமுடியும் பெண்ணே, ஐயோ! அவளெங்கே? குன்றினும் உயர் தோளா, என்றும் நீ, நலமாக வாழவேண்டும்!

: அது உன் வாழ்த்துதலே. அந்த அழகுமயிலின் வருகையிலே இருக்கிறது அணங்கே.

தோழி : ஆமாம்; உன் ஊர் எது?...

தலை : முழங்கும் அருவிநீர் அலையில் கழங்கு என முத்தாடும். கிழங்கு கிள்ளிதேனெடுத்து வளம்பாடி ஆடும் மலைச் சாரல் என் நாடு பெண்ணே!

தோழி : மகிழ்ச்சி தலைவா! வேலி சூழ்ந்து இடத்தில் வரிசையாய் பலாமரங்களும் இருக்கும். அதன் வேரிலே பழங்கள் குலை குலையாய் படுத்திருக்கும். அதாவது **வேர்ப்பலா!**

தலை : ஆமாம்! (வெறுப்பாக) "கோரிக்கை அற்று, கிடக்கு தங்கே. வேரிற் பழுத்தபலா!" அதெற்கென்ன?

தோழி : உலம்படு தோளா! உங்கள் உயில், நிலம் பழத்தைத் தாங்கி நிற்கும். இல்லையா?

தலை : (வெறுப்பாக) நிலா முகத்தாள் எங்கே என்றேன். நீ, பலாக்கதை பேசுகிருய்...... விந்தை!

தோழி : இல்லை! அதோ பார் அந்தப் பலாமரத்தை! அதன் கிளையிலே எவ்வளவு பெரிய கனிகள் தொக்குகின்றன? அதன் காம்பைப் பார்த்தாயா?...

தலை : அதிசயம்தான். நூலிலே கட்டிய களிறுபோல் கிளை நுனியிலே கனிகள்!

தோ : சிறிய கிளையிலே பெரிய கனிகள்! எவ்வளவு காலம் இருக்கும் என்று எண்ணுகிருய்?

தலை : 'இப்போதோ, இன்னும் சற்று நேரத்திலோ!' எவர் அறிவர்? ஏரிக்கரைக்குள்ளே கொந்தளிக்கும் நீர்போல் - எப்போதும் இதுபாழே!

தோழி : தலைவா! உன் தலைவியின் **காதலும் கனிபோல் பெரிதே! காம்புபோல் அவள் உயிரும் சிறிதே!** நீண்டநாள் அது நிற்பதும் அரிதே!

தலை : ஆ!......

தோ : என்னை நீவா கூந்தலும்- கண்ணை மூடா அழுகையும் - உன்னை நினைந்தே தொழுகையும் கொண்டு, வளை இழந்தாள்-விழிக்குமை மறந்தாள்! என் தலைவியின் உயிர் அறுபடாமலும், காதல் உடைபடாமலும் இருக்க உன்னிடம் தான் வழி உண்டு. ஓடு.]

தலை : தாயே! மரத்தை மீண்டும் பார்க்கிறேன். என் மனத்தை புயல் சூழ்கிறது! அடடா! கனி பழுத்தது ஊரார் தின்ன- என் காதல் பழுத்தது நான் உண்ண. சொல்லாமல் சொல்லி, என்னைக் கொல்லாமல் கொன்ற சொற்செல்வி! கடமையில் தவறிய என்னை - கனிகாட்டி மடமையை நீக்க வந்த அறிவுத் தோழி! ஐயோ!.....எனக்கு குணம் இருந்து என்ன? குலம் இருந்து என்ன? பாலைகடந்து வந்த இப்பணமிருந்து என்ன? இனிமை தேக்கிய பலாவின் கிளையே! இனி நீ இல்லையானல்; உளம் காணும் உருவே! உன் உயிர் ஒழிந்திருந்தால், குளம் காணும் என் உடலே! (போதல்.)

தோழி கூற்று

வேரல்வேலி வேர்க்கோட் பலாவின்
சாரல்நாட! செல்விய ஆகுமதி
யாரஃ தளிங்கி சினேரே! சாரற்
சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கி யாங்கவள்
உயிர்தவச்சிறிது- காமமேபெரிதே.

(குறுந்தொகை)

—**கோ. இறைமுடிமணி**

இருந்தமிழே

— 1-ம் பக்கத் தொடர்ச்சி —

"கல்வி தறுகண் இசைமை கொடையெனச்
சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே"

என்ற சூத்திரத்தால் அவர் பெறவைக்கிருர். அவற்றுள் நாம் இங்குத் 'தறுகண்' அதாவது அஞ்சாமைவாயிலாக வரும் வீரத்தைஎடுத்துக்கொள்வோம். திருவள்ளுவர் 'கல்வி' என்னும் அதிகாரத்தை அரசர்களுக்குச் சிறப்பும் பயனும் கருதிக் கூறி மற்றவர்களுக்கும் பெற வைத்தாரல்லவா? அதுபோல நாமும் நம் பண்டைத் தமிழர் வீரத்தைத் தமிழ் மன்னர்களாகிய சேர, சோழ, பாண்டியர்களின் வீரச் செயல்களை உணரும் வாயிலாக அறிந்துகொள்வது சால்புடையது.

"மன்னில் வாழ்தரும் மன்னுயிர் கட்கெலாம்
கண்ணும் ஆவியும் ஆம்பெருங் காவலன்"

என மநுநீதிகண்ட சோழ மன்னனைச் சேக்கிழார் பெருமான் தம்தெய்வத்திருவாக்காற் செப்பியருளியது போல உயிர்களனைத்திற்கும் (மக்கட்கு மட்டுமன்று) கண்ணும் உயிரும்போல இருந்து செங்கோல் நடாத்திய முடிவுடை வேந்தர் மூவரும் நீதியையும், வீரத்தையும், கொடையையும் தமது உயிர்போலப் போற்றி வந்தார்கள் என்பதற்கு அவர்கள் அரண்மனை வாயிலில் காலையில் முழங்கிய நீதி முரசும், உச்சிப்போதில் கொட்டப்பட்ட வீர முரசும், மாலையில் ஒலித்த கொடை முரசுமே போதிய சான்ருகும். அம் மூன்றுள்ளும் வீரத்தால் வரும் புகழையே அவர்கள் சிறந்ததாக கருதினுர்கள் என்பதையும், அக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு செய்த வீரச் செயல்களையும், அவர் காலத்தில் உடன் இருந்தவர்களாகவும், அவர்கட்குப் பிற்காலத்தில் இருந்தவர்களாகவுமுள்ள நல்லிசைப் புலவர் பெருமக்கள் பலர்—"பீடில் மன்னர்ப் புகழ்ச்சிவேண்டி, செய்யா கூறிக் கிளத்தல் எய்யாதாகின்று என் சிறு செந்நாவே" என்னும் ஏக்கழுத்த முடையவர்களாய்ப் பாடிய பாடல்களிலிருந்து தெள்ளத்தெளிய அறியலாம். இறந்த காலம் என்னும் பரந்த திரையால் மறைக்கப்பட்ட அவர்களின் வீரச்செயல்கள் முதலியவற்றைப் படம் பிடித்துக் காட்டியது போல அப்புலவர் பெருமக்கள், தங்கள் கவி ஓவியங்களாற் காட்டியிருக்கின்ருர்களாதலால், அப் பாடல்களைக்கொண்டு அறிவோமாக!

முதல், இடை, கடை என்னும் முச்சங்கங்கள் நிறுவிப் பண்டை காலத்துக் கயற்கொடி கொண்ட தென்னர்குல மன்னர்கள் "என்றுமுள தமிழை" வளர்த்ததும், அப்பரம்பரை இயல்பு அழியாமல், தமிழ்நாடு செய்த தவப் பயனுய்த் தோன்றிக் காலஞ் சென்ற பாண்டிதுரைத்தேவரவர்களாலே தோற்றுவிக்கப்பெற்று இன்றும் வளர்ந்துவருவதாயும், இன்று நாம் பொன்விழாக் கொண்டாடுவதற்குக் காரணமுள்ளதாயும் விளங்கும் சங்கமிருப்பதுமான இம் மதுரைமாநகரைத் தலைநகராகக்கொண்டு ஆட்சி புரிந்த பாண்டிய மன்னரின் வீரச் செயலை முதலில் அறிதல் பொருத்தமுடையதல்லவா?

இம்மன்னர்கள், தம்மோடு மாறுகொண்டு அமர் செய்யும் மாற்ருரை வென்று, அவர்கள் ஆண்மையை அழித்து, பெண் தன்மையுடையவர்களாக அவர்களை மதித்து, அவர்கள் விளையாடுவதற்குப் பாவையும் பந்தும் கொடுப்போம் என்பதற்கு அறிகுறியாகத் தங்கள் அரண்மனை முகப்பில் பாவையும், பந்தும் கட்டித் தொங்கவிட்டிருக்கும் செய்தியைக் கல்வி வீரராகிய நக்கிரர் பாடியருளிய,

"செருப்புகன்றெடுத்த சேணுயர் நெடுங்கொடி
வரிப்புனை பந்தொடு பாவை தூங்கப்
பொருநர்த் தேய்த்த போரரு வாயில்
திருவீற் றிருந்த தீதுதீர் நியமத்து
மாடமலி மறுகிற் கூடல்"

என்னும் திருமுருகாற்றுப்படை அடிகளால் அறியலாம். மேலும் அவர்கள் வடநாடு சென்று ஆங்குள்ள ஆரிய மன்னர்கள் பலரையும் வென்றுவந்தாகள் என்பதை,

"வட ஆரியர் படை கடந்து,
தென்தமிழ் நாடொருங்குகாண,
புரைதீர்கற் பிற்றேவி தன்னுடன்
அரசு கட்டிலிற்றுஞ்சிய பாண்டியன்"

என்பதால் அறிகிருேம். அவர்களின் தூய வீரத்திற்கு மற்றுமோர் அழகிய சான்றைக் காண்போம்:

விதர்ப்பநாட்டு வேந்தன் மகளாகிய தமயந்தி என்பாள் நளனுக்கு மணமாலை சூட்டிய போழ்து, அவளை மணம் செய்துகொள்ளும் விருப்பத்துடன் அங்கு வேற்றுருக் கொண்டு வந்திருந்த தேவேந்திரன் அழுக்காறு காரணமாக அங்குக் குழுமியிருந்த அரசர்களை நோக்கி "தானும் ஒளியுடையதாய், சந்திரனுக்கும் ஒளிதருவதாயுள்ள பகலவன் குலத்திலே தோன்றிய நீவிர் அனைவரும் இத்திங்கட் குலத்திலே தோன்றிய நளனுக்கு மாலை சூட்டுவதைக் கண்டு சும்மா இருக்கிறீர்களே! உங்கட்கு மான உணர்வு சிறிதும் இல்லையா?" என்று கூறிக் கலகத்தை மூட்டினுன்.

- அடுத்த இதழில் முடியும் -

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் கண்ணதாசன், ஏ. எல். எஸ். அச்சகம், 2-127, மவுண்ட் ரோடு, சென்னை-6. தமிழ்நாடு.